


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 15.10.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்



- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்








The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

# இந்திய நிகழ்வுகள்

- வேளாண்மை மற்றும் சுகாதாரத் துறையில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்காக செயற்கை நுண்ணறிவு **(AI – Artificial Intelligence)** தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் **மைக்ரோசாப்ட் இந்தியா மற்றும் நிதி ஆயோக் (NITI Aayog)** ஆகிய அமைப்புகளுக்கிடையே கையெழுத்தாகி உள்ளது.
    - Farm advisory Service
    - Healthcare screening models at Primary Health Center
    - Building Capacity for AI Through Education
    - Societal Impact Projects
    - Environment
    - Natural Language Processing.

- ஐக்கியநாடுகளின் சிறுவர் நிதியம் **(UNICEF – United Nations Children's Fund)** மற்றும் **உலக சுகாதார அமைப்பு (WHO)** ஆகியவை இணைந்து, இந்தியாவை **"போலியோ இல்லாத நாடாக"** அறிவித்துள்ளது.
    - போலியோ தடுப்பூசியினால் ஏற்படும் விளைவுகள் இந்தியாவில் மிகவும் குறைவு எனவும் அறிவித்துள்ளது. **1985-ல்** தொடங்கப்பட்ட **UPI – Universal Immunization Programme** மூலம் இவ்விலக்கை இந்தியா அடைந்துள்ளது.

- இயற்கை பேரிடரின் போது ஏற்படும் **சேதங்கள், வணிகரீதியிலான** பாதிப்புகள் உள்ளிட்டவற்றை கணக்கில் கொண்டு, ஐ.நா. மன்றம் வெளியிட்டுள்ள, இயற்கை பேரழிவுகள் அதிகம் தாக்கும் நாடுகளில் **அமெரிக்கா, சீனா, ஜப்பான்** ஆகியநாடுகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளது.
    - இதற்கு அடுத்தபடியாக இயற்கை பேரழிவுகளால் அதிக இழப்புகளை **சந்தித்த நாடுகளில் இந்தியா (6 லட்சம் கோடி) 4-**வது இடத்தைப் பிடித்துள்ளது.

# உலக நிகழ்வுகள்

- ஆட்கடத்தலை தடுப்பதற்காக **இலங்கை அரசுக்கு, ஆஸ்திரேலியா**

உதவி செய்யவுள்ளது. அதன் ஒருபகுதியாக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதற்கான இணைய வழி பயிற்சியை தொடங்க உள்ளது.

- இந்த பயிற்சிக்கான அம்சங்களை இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஆலோசனையுடன் **ஐ.ஓ.எம்(IOM)** எனப்படும் இடம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (**International Organization for Migration**) தயாரித்துள்ளது. இதற்கான நிதியுதவியினை ஆஸ்திரேலிய அரசு வழங்கியுள்ளது.

- **இந்தியா மற்றும் அஜர்பைஜன் (Azerbaijan)** நாடுகளுக்கு இடையே வணிகம் மற்றும் பொருளாதாரம்,அறிவியல் & தொழிற்நுட்பம் தொடர்பான **5-வது கூட்டம் புதுடெல்லியில்** நடைபெற்றது.
  - இக்கூட்டத்தில் வணிகம், பொருளாதாரம்,அறிவியல் மற்றும் தொழிற்நுட்பத் துறையில் மேம்பாடு போன்றவற்றில் ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளனர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- அக்டோபர் 21-ல் புதுதில்லியில் நடைபெறவுள்ள **"Delhi half - மராத்தான்"**போட்டியின் நல்லெண்ணத் தூதராக அமெரிக்க தடகள வீரர் **"சான்யா ரிச்சர்ட்ஸ் ராஸ்" Sanya Richards-Ross** என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
  - இவர் ஒலிம்பிக் போட்டியில் நான்குமுறை தங்கப் பதக்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

- **ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் Shanghai Masters** போட்டியில் செர்பியவீரர் நோவக் ஜோகோவிச், குரோஷிய வீரர் **போர்னாகோரிக்-யை (BornaCoric)** வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
  - ஷாங்காய் மாஸ்டர்ஸ் சாம்பியன் பட்டத்தை நோவக் ஜோகோவிச் **நான்கு முறை** வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- திருப்பூர் சாய் கிருஷ்ணா நுண்கலைக் கூடத்தின் துணைநிறுவனர்

சந்தியா சங்கருக்கு 'நாட்டிய கலா ரத்னா','நாட்டியசிரோமணி' என்ற விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

- தேசிய அளவில் சிறந்த கலைஞர்களில் நால்வருள் ஒருவராக சந்தியாசங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- **குறிப்பு :**
  - கலாச்சார தூதுவராக வெளிநாடு சென்றுள்ள இவர், 2017-ல் இந்திய சாதனையாளர் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **உலக தர நிர்ணய தினம் - அக்டோபர் 14 (World Standards Day)** உலகத் தரத்தினை(Standard) அனைவரும் பயன்படுத்தும் நோக்கத்துடன்,உலகளவில் ஆண்டுதோறும் அக்டோபர் 14-ம் நாளன்று உலக தர நிர்ணய நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.
  - **1970-ஆம்** ஆண்டுமுதல் உலக தர நிர்ணய நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.
  - 2018-ம் ஆண்டின் உலக தர நிர்ணய தினத்தின் கருத்துரு **(Theme) : "International Standards and the Fourth Industrial Revolution".**

We Shine Academy™